بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஜுமுஆ பேருரை**

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)**

**ஜெர்மனியிலுள்ள ஃபிரான்க்ஃபர்ட்டில் 05.06.2015 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 05 June 2015 (Tamil)**

**நாம் கொள்கை அளவிலும் செயல் அளவிலும் ஹஸ்ரத் வாக்களிக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், நம்மை ஆக்க விரும்பியவர்களாக ஆக வேண்டும். நமது உலகமும் புதியதாக வேண்டும்; நமது வானமும் புதியதாக வேண்டும். அது புதிய பூமி புதிய வானம் ஆகியவற்றை உருவாக்குவதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்ப்ட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு ஒத்துழைக்கக் கூடியதாகவும், உதவக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.**

**தஷஹ்ஹுது தஅவ்வுஸ் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வின் அருளால் இன்று ஜெர்மனி அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாடு ஆரம்பமாகின்றது. அஹ்மதிய்யா ஜமாஅத் நிலைபெற்றுள்ள அதிகமான நாடுகளில் இந்த மாநாடு நடப்பது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒரு முக்கியமான பகுதியாகும். ஒரு காலத்தில் ஆண்டு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்தியாவிலுள்ள அஹ்மதிகளுக்கும் காதியான் ஆண்டு மாநாட்டிற்காக வருவது செலவினங்களின் காரணமாக மிகவும் கடினமாக இருந்தது. இன்னும் கூறுவதாயின் சிலருக்கு சாத்தியமற்றதாக இருந்தது. எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், பயணச் செலவு கிடைப்பதற்காக ஆண்டு முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக பணத்தை சேமித்து வாருங்கள் என ஜமாஅத்திற்கு அறிவுரை வழங்கினார்கள். ஆனால் இன்று அல்லாஹ்வின் அருளால் முன்னேற்றமடைந்த நாடுகளில் - ஏன் - ஜமாஅத் பெரியதாக இருக்கின்ற நாடுகளில் நடக்கும் மாநாடுகளில் கலந்து கொள்பவர்களின் வாகனங்கள், கார்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை எந்த அளவுக்கு அதிகமாகி விட்டன என்றால் அதற்காக கார் பார்கிங் செய்வதற்கு அமைப்பாளர்களுக்கு குறிப்பிட்ட ஏற்பாடு செய்ய வேண்டியதிருக்கிறது. உங்களில் பலருடைய முன்னோர்கள் கஷ்டப்பட்டு, சிரமம் மேற்கொண்டு மாநாட்டில் கலந்திருப்பார்கள். ஒவ்வோர் ஆண்டும் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என விருப்பமும் ஏக்கமும் கொண்டிருப்பவர்களுக்கும் அதற்கான சாத்தியம் இல்லாதிருந்திருக்கலாம். **ஆனால் இவ்வளவு வசதிகள் கிடைத்த பிறகு, உங்களுக்குக் கிடைக்கின்ற பயணத்தின் வசதிகள், நல்வாய்ப்புகள் உங்களை அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக மாறுவதற்கும், ஈமானில் அதிகமாவதற்கும் காரணமாக அமைந்திருக்கின்றனவா என்றும் உங்களில் எவராவது நினைத்துப் பார்த்திருக்கின்றீர்களா?** நமது பெரியவர்களுக்கு எத்தகைய ஈமான் இருந்ததோ இறைவனுடன் அவர்களுக்கு எத்தகைய தொடர்பு இருந்ததோ அந்த தகுதியை நாமும் அடைந்திருக்கிறோமா என உங்களில் எவராவது சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்களா? அந்த காலத்திலுள்ள சான்றோர்கள் ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தைப் பெற்றிருந்தும் அவர்களை ஏற்றுக் கொண்டிருந்தும் நான் தற்போது கூறியது போன்று (ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என) விருப்பப்பட்டும் செல்வம் தடையாக இருந்ததன் காரணமாக பயணம் மேற்கொண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வரை சென்றடைய முடியவில்லை. ஆனால் இன்று எந்த நாடுகளிள் ஆண்டு மாநாடுகள் நடைபெறுகின்றனவோ ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடிமை மற்றும் கலீஃபா கலந்து கொள்கிறாரோ அதில் கலந்து கொள்வதற்காக மக்கள் மற்ற நாடுகளிலிருந்தும் செலவு செய்தும் வந்து விடுகின்றனர். எனக்கு முன்னாலும் பலர் அமர்ந்திருக்கின்றனர். இன்னும் கூறுவதென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மையை அறிவதற்காக அவர்கள் மீது இன்னும் ஈமான் கொள்ளாதவர்களும் பலர் வந்திருக்கின்றனர்.

ஆக, அல்லாஹ் நிலைமைகளை மாற்றி விட்டான்; ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூதுச் செய்தி மிக வேகமாக உலகில் பரவிக்கொண்டிருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாக இருக்கின்ற அதே நேரத்தில், அந்த சான்றோர்களின் சந்ததிகள் தம்மைப் பற்றியும், நாம் அல்லாஹ்வுடனுள்ள நமது தொடர்பு, நமது ஈமான், அல்லாஹ்வின் கட்டளைகளின் படி செயல்படுவது ஆகியவற்றில் எந்த அந்தஸ்தை அடைந்திருக்கிறோம் என ஆய்வு செய்ய வேண்டும். **நமது குடும்பத்தில் நமது பெரியார்களின் நன்மையின் தகுதிகளுடன் ஒப்பிடுகையில் நமக்கு அதில் விரைவாக வீழ்ச்சி ஏற்படுகிறதென்றால் நமது நிலைமை கவலைக்குரியதாகும்.** நாம் உலகத்தை சம்பாதிக்கிறோம். ஆனால் நமது மார்க்கத்தின் கட்டம் வெற்றிடமாக இருக்கிறது என்றால் பிறகு அப்படிப்பட்ட நிலைமையில் பிறகு மனிதன் உலக விஷயங்களில் மூழ்கி இறைவனுடனுள்ள தொடர்பை முற்றிலுமே துண்டித்து விடுகிறான். பிறகு இறைவனுடைய பார்வையிலிருந்து விலகி ஷய்த்தானின் மடியில் சென்று விழுந்து விடுகிறான். **பிறகு அப்படிப்பட்டவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்வது வெறும் சம்பிரதாயமாக ஆகி விடுகிறது.**

எனவே ஜல்ஸாவில் கலந்து கொள்வது நம்மை நமது பலவீனங்களை சுட்டிக்காட்டியவாறு நம்மிடம் புரட்சியை கொண்டு வரக் கூடியதாக இருக்க வேண்டும் என நம்மில் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். நம்மை இறைவனுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக ஆக்க வேண்டும். நமது செழிப்பு நம்மை அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக்க வேண்டும். நாமோ அல்லது நமது சந்ததிகளோ ஒருபோதும் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாகி விடக் கூடாது; நாம் எப்போதும் நமது சான்றோர்களின் விருப்பங்கள், துஆக்களுக்கு வாரிசாக வேண்டும் என துஆ செய்தவாறும் அதற்காக முயற்சி செய்தவாறும் இருக்க வேண்டும். அவ்வாறே அல்லாஹ்வின் அருளால் ஜமாஅத்திற்கு வளர்ச்சி கிடைத்துக் கொண்டிருக்கிறது; ஜமாஅத் உலகில் மூலை முடுக்குகளிலெல்லாம் பரவிக் கொண்டிருக்கிறது. **அல்லாஹ் மக்களின் உள்ளங்களைத் திறந்து, வடக்கிலிருந்தும், தெற்கிலிருந்தும், கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் ஹஸ்ரத் வாக்களிகப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைவதற்கான நல்வாய்ப்பை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறான்.** அவர்கள் தமது ஈமானில் புத்துயிரைப் உருவாக்குவதற்காக இணைகின்றனர். அவர்கள் இறைவனுடனுள்ள தமது தொடர்பை உறுதிப்படுத்த விரும்புகின்றனர். அவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்கான நோக்கத்தை நிறைவேற்றுபவர்களாகவும் ஆகட்டுமாக. அவர்களின் உள்ளங்கள் திறக்கட்டுமாக. மேலும் அதிகமாக திறந்து கொண்டிருக்கட்டுமாக. அல்லாஹ் அவ்வாறு செய்வானாக. மாநாட்டை நடத்துவதற்கான நோக்கமாக ஹஸ்ரத் வாக்களிக்கப்ப்ட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறிய விஷயத்தை மனதில் வையுங்கள். அதாவது, இறைவனுடன் தொடர்பு, தனது வாழ்வை அவனது

கட்டளைக்கிணங்க ஆக்குவது, தமது சகோதரரின் உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம், அல்லாஹ்வின் தூதை உலகில் பரப்புவதற்கு முயற்சி ஆகியவை. இந்த எல்லா விஷயங்களையும் செய்வதற்கு ஒரு தியாகம் தேவைப்படுகிறது.

எனவே இந்த மாநாடு எந்தவோர் உலக விழாவும் அல்ல; உலக நோக்கங்களைப் பெறுவதற்கான வழிமுறையுமல்ல. இங்கு வருபவர்கள் ஒன்று திக்ரே இலாஹியின் பக்கம் கவனமூட்டிக் கொண்டிருக்க வேண்டும். இது அல்லாஹ்வுடனுள்ள தொடர்பை அதிகமாக்கவும் அவனது அருள்களைப் பெறுவதற்கும் அவசியமானதாகும். அல்லாஹ் கட்டளையிட்டுள்ள நன்மைகளைப் பெறுபவர்களாகவும், அதை மேற்கொள்பவர்களாகவும் பிறகு அவற்றை நமது வாழ்வில் நிரந்த பகுதியாக்கிக் கொள்ளக் கூடியவர்களாகவும் மாற வேண்டும் என்பதை எல்லா நேரமும் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். திக்ரே இலாஹி தொடர்பாக நான் இன்னொன்றையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். சபைகளில் அமர்ந்திருக்கின்றவர்களின் திக்ர் அது தனித்தனியாக நடந்தாலும், அல்லது ஒவ்வொருவரும் தனித்தனியாக செய்தாலும் அது ஜமாஅத் அளவிலானதாகவே இருக்கிறது; அது மனிதனுக்கு பயனுள்ளதாக இருக்கின்ற அதே நேரத்தில் ஜமாஅத் அளவிலும் அல்லாஹ்வின் அருள்களைப் பெறுவதற்கான வழிமுறையாக இருக்கிறது.

**எனவே கலந்து கொள்கின்றவர்கள் இந்த நாட்களை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்குக் கூறியபடி, நம்மிடமிருந்து எதிர்பார்த்தபடி கழிக்க வேண்டும்.** அல்லாஹ்வுடனுள்ள தொடர்பை உறுதியாக்குங்கள். இரண்டாவது உங்களை அல்லாஹ்வின் படைப்பினங்களின் மீதுள்ள நேசத்தினால் நிரப்புங்கள். உங்கள் சகோதரர்களின் உணர்ச்சிகளையும், உணர்வுகளையும் கவனத்திற் கொள்ளுங்கள். எவரிடமாவது உங்களுக்கு பிணக்கு இருந்தாலும் இங்கு ஆண்டு மாநாட்டில் அதை நீக்குவதற்கு முயற்சி செய்யுங்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

‘‘இந்த உலகம் சில நாட்களாகும். கடைசியில் முடிந்து விடக் கூடிய ஓர் இடமாகும். முடிந்து விடக் கூடியதற்கான இந்தக் காரணிகளும் இதற்குள்ளேயே அடங்கியிருக்கின்றன. அது தனது வேலையைச் செய்து கொண்டிருக்கிறது; ஆனால் தெரிவதில்லை. எனவே இறைவனை தெரிந்து கொள்வதன் பக்கம் சீக்கிரம் காலெடுத்து வைக்க வேண்டும். **இறைவனை அடையாளம் கண்டு கொள்பவருக்குத்தான் அவனுடைய இன்பம் கிடைக்கிறது.** எவர் அவன் பக்கம் உண்மையுடனும் நன்றியுணர்வுடனும் காலெடுத்து வைப்பதில்லையோ அவருடைய துஆ தெளிவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அதன் ஏதாவது இருண்ட பகுதி அத்துடன் சேர்ந்தே இருக்கிறது. இறைவனை நோக்கி கொஞ்சம் செல்வீர்கள் என்றால் அவன் அதை விட அதிகமாக உங்களை நோக்கி வருவான். ஆனால் முதலில் உங்களிடமிருந்து அசைவு ஏற்படுவது அவசியமாகும்.

பிறகு **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:**

‘‘ சிலர் நாங்கள் எல்லா நன்மைகளையும் செய்தோம்; தொழுதோம்; தான தருமங்களையும் செய்தோம். ஆனால் எங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை என முறையிடுகின்றனர். அப்படிப்பட்டவர்கள் ஆரம்பத்திலிருந்தே முறையீடு செய்பவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இறைவனின் ருபூபிய்யத் (படைத்து காத்தோம்பும் பண்பு) பற்றி ஈமான் கொள்வதில்லை. அவர்கள் எல்ல செயல்களையும் அல்லாஹ்வுக்காக செய்யவுமில்லை. **அல்லாஹ்வுக்காக ஒரு செயல் செய்யப்பட்டால் அது வீணாவதும், அல்லாஹ் அதற்கான நற்கூலியை**

**இவ்வுலகில் கொடுக்காமல் இருப்பதும் சாத்தியமே இல்லை.''**

எனவே அல்லாஹ்விடம் தொடர்பு கொள்வதற்கு நாம் தூய்மையான முறையில் அவனை வணங்க வேண்டியதும் வரும். மேலும் அவனுடைய கட்டளைகளின்படி செயல்பட வேண்டியது வரும். நமது வேலை இறைவனுடைய திருப்திக்காக இருக்குமென்றால் நாம் அவனது அருள்களைப் பெறுபவர்களாக மாறுவோம். எனவே நாம் அவர்களின் பைஅத்தின் கீழ் வந்தும் இந்த விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்தவில்லை என்றால், நாம் நமது பொறுப்புகளை நிறைவேற்றவில்லை. நபிமார்கள் தன்னை ஏற்றுக் கொள்பவர்களிடம் புரட்சியை ஏற்படுத்துவதற்காக வருகின்றனர். மக்களின் நிலைமையை முற்றிலும் வேறுபட்ட நிலையில் மாற்றுவதற்காக வருகின்றனர். **ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும் அல்லாஹ், அவர்கள் ஒரு புதிய பூமியையும், புதிய வானத்தையும் படைப்பதாக ஆன்மீகக் கனவில் காட்டினான். பிறகு அவர்கள். வாருங்கள் நாம் மனிதனைப் படைப்போம் எனக் கூறினார்கள்.** இந்த புதிய பூமி, புதிய வானத்தைப் படைத்தல் மற்றும் மனிதனைப் படைத்தல் என்பது அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் உருவாக்கவிருந்த அந்தப் புரட்சியாகும். **புதிய பூமியையும் புதிய வானத்தையும் படைத்தல் என்பது எல்லாரையும் விட அதிகமாகவும் முழுமையாகவும் நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தென்படுகிறது.** அவர்கள் எவ்வாறு புதிய பூமியையும், புதிய வானத்தையும் உருவாக்கினார்கள். எதிரிகளையும் ஓரிறை கொள்கையில் நிலைநாட்டினார்கள். சிலைகளை வணங்கியவர்கள், ஓரிறைவனை மறுத்தவர்கள் அஹது, அஹது எனக் கூறியவாறு எல்லாவிதமான அநீதிகளையும் சகித்துக் கொண்டார்கள். அவர்கள் ஓரிறை கொள்கைக்காக தன் உயிரை தியாகம் செய்தார்கள்; ஆனால் ஓரிறை கொள்கையை மறுக்கவில்லை. இதுதான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உருவாக்கிய மாறுதலாகும். பிறகு பெண்களின் உரிமைகளைக் கொடுத்தார்கள். அவர்களின் கண்ணியத்தை நிலைநாட்டினார்கள். பெண்களுக்கு எவ்வித கண்ணியமும் இல்லாதிருந்த சமூகத்தில் அவர்களின் அந்தஸ்தை நிலைநாட்டினார்கள். இது மிகப் பெரிய விஷயமாக இருந்தது - இன்றும் இருக்கிறது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் விலங்குகளை விட மோசமாக இருந்தவர்களை மனிதர்களாக்கினார்கள். பிறகு அவர்களை படிப்பறிவுள்ள மனிதர்களாக்கினார்கள். பிறகு அவர்களை இறைதொடர்புள்ள மனிதர்களாக்கினார்கள் என ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். இது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வருகையால் ஏற்பட்ட ஒரு மகத்தான அற்புதமாகும்.இறைவனோடு தொடர்புள்ள அந்த மனிதர்கள் ஒவ்வொரு வேலையையும் இறைவனின் திருப்திக்காக செய்ய ஆரம்பித்து விட்டார்கள். ஆக, இதுதான் அன்னாரின் வருகையால் உருவான புதிய பூமியும் புதிய வானமுமாகும். மேலும் இக்காலத்தின் அவர்களின் உண்மைத் தொண்டரிடம் அல்லாஹ், புதிய பூமியையும் புதிய வானத்தையும் உருவாக்குவீராக எனக் கூறினான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலத்தில் முஸ்லிம்களிடம் ஆன்மீகத்திலும் நல்லொழுக்கத்திலும் இருந்த நிலைமைகள் இன்று இருக்கின்றனவா? இல்லை. மாறாக, அவர்களின் வருகைக்கு முன்னர் என்ன அறிவீனம் இருந்ததோ அது புதிதாக இங்கு உருவாகி விட்டது. எனவேதான் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் காலத்தின் மஹ்தியை அனுப்பினான். ஒரு காலம் இருந்தது. அப்போது முஸ்லிம்கள் ஓரிறை கொள்கைக்காக உயிரைக் கொடுத்தார்கள். எல்லாவிதமான தியாகங்களையும் செய்தார்கள். இஸ்லாத்தைப் பரப்பினார்கள். மேலும் உலகில் மிகப் பெரிய ஒரு மாற்றம் ஏற்பட்டது. ஆனால் இன்று முஸ்லிம்கள் ஓரிறை கொள்கைக்குப் பகரமாக கபருகளுக்கு முன்னால் சஜ்தா செய்கிறார்கள். இறந்தவர்களிடம் வேண்டுகிறார்கள். ஷிர்க்கில் மூழ்கியிருக்கிறார்கள். லா இலாஹ

இல்லல்லாஹ் என்பது இப்போதும் இருக்கிறதுதான். ஆனால் அது இப்போது எந்தவொரு மாற்றத்தையும் உருவாக்குவதில்லை. அதற்குக் காரணம், அதை அறிகின்றவர்கள் அதன் பொருளை, கருத்தைப் புரிவதில்லை. அவர்கள் முஸ்லிம்களாக இருப்பது பெயரளவுக்குத்தான் இருக்கிறது. சந்தேகமின்றி அவர்களில் பலர் ஐந்து முறை உபூதிய்யத்தை வெளிப்படையில் எடுத்துரைக்கின்றனர். தொழுகையிலும் பாங்கிலும் ஓரிறை கொள்கைக்கான சாட்சியை வழங்குகிறார்கள். ஆனால் அவர்களின் செயல்கள் ஷிர்க்கானவையாக இருக்கின்றன.

எனவே **அப்படிப்பட்ட நேரத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகை - அவர்கள் ஒரு புதிய பூமியையும் ஒரு புதிய வானத்தையும் உருவாக்குவதற்கு அவசியமானதாக இருந்தது. மேலும் அவர்கள் ஒரு புரட்சியை உருவாக்கிக் காட்டியும் விட்டார்கள்.** எனவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வாறு புதிய பூமியையும் புதிய வானத்தையும் உருவாக்கினார்கள் என்பதற்கு நாம் சான்றளிக்க வேண்டுமென்றால் அதற்கு மிகப் பெரிய சான்றாக நாம் இருக்க வேண்டும். ஓரிறை கொள்கையை நிலைநாட்டுவது நமது முதல் முன்னுரிமையாக இருக்க வேண்டும். அல்லாஹ்வுடனுள்ள தொடர்பை அதிகமாக்குவதில் நமது முயற்சி இருக்க வேண்டும். அல்லாஹ்வின் கட்டளைகளின்படி செயல்படுவதில் நாம் முழுமையாக முயற்சி செய்ய வேண்டும். படைப்பினங்களின் உரிமைகளை நிறைவேற்றுவதன் பக்கம் நமது முயற்சி இருக்க வேண்டும். **நாம் வெறும் கொள்கை அளவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்பவர்களாக இல்லாமல் செயல் அலவிலான மாற்றங்களும் நம்மிடம் தென்பட வேண்டும்.** நம்பிக்கையாளர்களின் உள்ளம் பூமியைப் போன்று இருக்கிறது என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்கள். எனவே உங்கள் உள்ளங்களை கொள்கையளவில் மட்டுமல்லாமல் செயல் அளவிலும் பயனுள்ளவையாக ஆக்க வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளும் நல்வாய்ப்பை இறைவன் நமக்கு வழங்கி அருள் புரிந்திருக்கிறான். அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நமது செயல்களை நல்லவையாக்க விரும்புகிறான். மேலும் **நமது கரங்களால் பூமியை சீரமைக்க வேண்டும் என விரும்புகிறான்.** ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக அல்லாஹ் இதற்கான வழிமுறையை கற்றுத் தந்து விட்டான். அதை பயன்படுத்துவது நமது வேலையாகும். உண்மையிலேயே நாம் இந்த வேலையை செய்கின்றோமா?என நாம் இப்போது பார்க்க வேண்டும்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

''மக்கள் திட்டங்களைத் தீட்டுகின்றனர். ஆனால் துஆவில் கவனமின்மை காட்டப்படுகிறது என்பதை நான் காண்கிறேன். இன்னும் கூறுவதென்றால், காரணிகளை வணங்குவது எந்த அளவுக்கு அதிகமாகிவிட்டதென்றால், உலக காரணிகள் இறைவனாக்கப்பட்டிருக்கின்றன. துஆ பற்றி எள்ளிநகையாடப்படுகிறது. மேலும் அது வீணான ஒன்றாக கருதப்படுகிறது. **இது உலகில் பரவிக் கொண்டிருக்கின்ற பயங்கரமான விஷமாகும்.** ஆனால் இறைவன் இந்த விஷத்தை நீக்க விரும்புகிறான். உலகிற்கு இறைவனைப் பற்றிய ஞானம், துஆவின் உண்மை நிலை, அதன் தாக்கத்தைப் பற்றி தெரிய வேண்டும் என்பதற்காகவே இறைவன் இந்த இயக்கத்தை நிலைநாட்டியிருக்கிறான்.''

எனவே இந்த நோக்கத்தை ஒவ்வோர் அஹ்மதியும் தமக்கு முன்னால் வைக்க வேண்டும். இறைவனோடுள்ள தமது தொடர்பை அதிகமாக்க வேண்டிய தேவை இருக்கிறது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில்**

**கூறுகிறார்கள்:**

''இந்தக் காலமும் ஆன்மீக போருக்கான காலமாகும். ஷய்த்தானுடன் போர் ஆரம்பமாகியிருக்கிறது. ஷய்த்தான் தனது எல்லா ஆயுதங்களையும் சதித் திட்டங்களையும் எடுத்துக் கொண்டு இஸ்லாத்தின் கோட்டையைத் தாக்கிக் கொண்டிருக்கின்றான். இஸ்லாத்தை தோல்வியுறச் செய்ய வேண்டும் என அவன் விரும்புகிறான். ஆனால் **இறைவன் இக்காலத்தில் ஷய்த்தானின் இந்த கடைசி போரில் அவனை நிரந்தரமாக தோல்வியுறச் செய்வதற்காக இந்த இயக்கத்தை நிலைநாட்டியுள்ளான்.''**

எனவே இந்த ஆன்மீகப் போருக்காக ஒவ்வோர் அஹ்மதியும் முயற்சி செய்ய வேண்டும். முன்னுக்கு வர வேண்டும். **நாம் நம்மிடம் ஒரு புதிய பூமியையும் வானத்தையும் உருவாக்காத வரை இது நடக்க முடியாது.**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:**

ஷய்த்தானைத் தோல்வியுறச் செய்வதற்காக இந்த இயக்கத்தை நிலைநாட்டியுள்ளான் என இறைவன் கூறியிருக்கிறான் என்றால் தன்னை ஏற்றுக் கொள்கின்ற ஒவ்வொரு நபர் மீதும், அவர் ஆன்மீகத்தில் முன்னேற்றமடைந்து ஷய்த்தானை எதிர்த்துப் போரிட வேண்டும் என்ற பொறுப்பை அவன் சுமத்தியுள்ளான். பிறகு படைப்பினங்களின் உரிமைகளுக்கான தகுதிகளை பெறுவதன் பக்கம் மீண்டும் கவனமூட்டியவாறு கூறுகிறார்கள்:

''இந்த விஷயங்களை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இறைவனின் இரு கட்டளைகள் இருக்கின்றன. ஒன்று, அவனுடைய பண்புகளிலோ, வணக்கங்களிலோ அவனுக்கு எவரையும் இணையாக்காதீர்கள். இரண்டாவது, மனித குலத்துடன் அநுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். மேலும் நன்மை செய்வது என்பதன் கருத்து உங்கள் சகோதரர்களுடன், உறவினர்களுடன் மட்டுமே செய்யுங்கள் என்பதன்று. மாறாக, எந்த மனித படைப்பாக இருந்தாலும், இறைபடைப்பினங்களில் எதுவாக இருந்தாலும் அதனுடன் அநுதாபத்துடன் நடந்து கொள்ள வேண்டும். அவர் இந்துவா கிறித்தவரா எனப் பார்க்கக் கூடாது. அல்லாஹ் உங்களின் நீதியை தன் கையில் எடுத்துக் கொண்டுள்ளான் என நான் உண்மையாகவே உங்களிடம் கூறுகிறேன். அதை நீங்களே செய்ய அவன் விரும்பவில்லை. (அதாவது உங்களுக்குரிய பழிவாங்குதலை நீங்களே செய்யாதீர்கள்). எந்த அளவுக்கு மென்மையை மேற்கொள்வீர்களோ எந்த அளவுக்கு தன்னடக்கத்தை மேற்கொள்வீர்களோ அல்லாஹ் அந்த அளவுக்கு மகிழ்ச்சி அடைவான். உங்கள் எதிரிகளை நீங்கள் இறைவனிடம் ஒப்படைத்து விடுங்கள்.

நாம் நமது எல்லா உரிமைகளையும் நிறைவேற்றுபவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நம்மை உருவாக்க விரும்பிய அந்த நபர்களாக நாம் கொள்கை அளவிலும், செயல் அளவிலும் அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. நமது பூமியும் புதியதாகட்டுமாக. நமது வானமும் புதியதாகட்டுமாக. **மேலும் நாம் புதிய பூமியையும் புதிய வானத்தையும் உருவாக்குவதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு உதவி ஒத்தாசை செய்யக் கூடியவர்களாக ஆவோமாக.** அல்லாஹ் இந்த மாநாட்டையும் எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. இங்கு வந்திருப்பவர்கள் எண்ணற்ற அருள்களை சேகரித்துச் செல்பவர்களாக இருக்கட்டுமாக. மாநாட்டின் நிகழ்ச்சிகளை நீங்கள் கவனமாகக் கேளுங்கள். அவற்றை உங்கள் வாழ்க்கையின் அங்கமாக மாற்றுவதற்கு முயற்சி செய்யுங்கள். ஒவ்வொரு சொற்பொழிவும் மிக நல்லதாக இருக்கிறது. அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

**Nazarath Nashr-o-Isha'ath, Qadian**

**Translated By *O.M. Muzzammil Ahmad* For Tamil Desk**